


அறுவை சிகிச்சை செய்யப்பட்ட இளம்பெண் அபினயாவுடன் மியாட் மருத்துவமனை டாக்டர் பாஷி, மருத்துவமனை நிர்வாக இயக்குனர் மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன்தாஸ்.

### இந்தியாவிலேயே முதல் முறை

# இதய மாற்று அறுவை சிகிச்சை செய்த இளம்பெண்ணுக்கு ரத்தநாள ஆபரேஷன்

## மியாட் மருத்துவமனை டாக்டர்கள் சாதனை

சென்னை, டிச.13: இந்தியாவிலேயே முதல்முறையாக இதய மாற்று அறுவை சிகிச்சை செய்த இளம்பெண்ணுக்கு ரத்த நாள ஆபரேஷன் செய்து மியாட் மருத்துவமனை டாக்டர்கள் சாதனை படைத்துள்ளனர்.

திருவாரூர் பகுதியை சேர்ந்தவர் நாகராஜன். இவருக்கு 1 மகளும், 3 மகன்களும் உள்ளனர். இவரது மகள் அபினயா பிஎஸ்சி மைக்ரோ பயாலஜி படித்துவிட்டு இன்சூரன்ஸ் நிறுவனத்தில் வேலை பார்த்துள்ளார். இந்நிலையில் அவருக்கு இதயம் செயல் இழந்தது. இதனை தொடர்ந்து சென்னை அரசு பொது மருத்துவமனையில் அவருக்கு இதய மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. பின்னர் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதால் அவர் மியாட் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அவருக்கு அங்கு சிக்கலான அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

இதுகுறித்து அபினயாவுக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்ட மருத்துவர் குழு தலைவர் பாஷி கூறியதாவது:

2009ல் அரசு மருத்துவமனையில் அபினயாவுக்கு இதயமாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இந்நிலையில், அவர் தீவிர மார்பு வலி மற்றும் மூச்சுவிடுவதில் சிரமம் ஏற்பட்டு கடந்த மாதம் 22ம் தேதி மியாட்டில் சேர்க்கப்பட்டார்.

அவருக்கு அனைத்து பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதில், அவருக்கு ஏறுமுக பெருந்தமனியில் கூறுபாட்டு ரத்த நாள நெளிவு மற்றும் இதயத்தின் பெருந்தமனி வால்வில் ரத்த கசிவு ஏற்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதை உடனடியாக சரிசெய்யாவிட்டால் உயிருக்கு ஆபத்து என்பதால் ஒரு பெரிய அறுவை சிகிச்சை செய்ய முடிவு செய்யப்பட்டது. ஏற்கனவே, மாற்று இதயம் பொருத்தப்பட்ட ஒருவருக்கு மீண்டும் இந்த வகை ஆபரேஷன் செய்வது மிக சிக்கலானது. இந்தியாவில் இதுபோன்ற அறுவை சிகிச்சை இதுதான் முதல் முறை. உலகளவில் 3 அறுவை சிகிச்சைகள் நடைபெற்றுள்ளன.

தீவிர பரிசோதனைக்கு பிறகு அந்த சிக்கலான அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அவரது நோயுள்ள வால்வு, ஏறுமுக பெருந்தமனி மற்றும் கூறுபட்ட இதய சுவர் சிரை தமனிகள் அகற்றப்பட்டன. ஏறுமுக பெருந்தமனி மற்றும் பெருந்தமனி வால்வு செயற்கை வால்வு மாற்றப்பட்டன. மேலும், இதய சுவர் சிரை தமனிகள் மீண்டும் பொருத்தப்பட்டன. எத்தகைய சிக்கலும் இல்லாமல் அவர் தற்போது விரைந்து குணமடைந்து வருகிறார்.

2 வாரங்களுக்கு முன்தான் அறுவை சிகிச்சை நடைபெற்றது. தற்போது நன்கு உடல்நலம் தேறியுள்ளார். இன்னும் சில நாட்களில் அவர் சிகிச்சை முடிந்து வீடு செல்வார். நோயாளி ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர் என்பதால் மியாட் இன்டர்நேஷனல் நிர்வாகம், இந்த அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவ கட்டணங்கள் அனைத்தும் சேர்த்து ₹5 லட்சத்தை தள்ளுபடி செய்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின்போது, மியாட் மருத்துவமனை நிர்வாக இயக்குனர் மோகன்தாஸ், தலைவர் மல்லிகா மோகன்தாஸ் உடன் இருந்தனர்.